கலாமின் விதைகள் வாட்சப் குழு
கு.கார்த்திக்குமார் - 9688389861

# 11ம் வகுப்பு வரலாறு

1. 24ம் தீர்த்தங்கரர் யார்?
   வர்த்தமான மகாவீரர்

2. வர்த்தமானரின் பிறந்த இடம் எது?
   குண்டக் கிராமம் (வைசாலி)

3. வர்த்தமானரின் பெற்றோர் யார்?
   சித்தார்த்தர், திரிசலை

4. வர்த்தமானர் பெற்ற ஆன்மீக அறிவின் பெயர் என்ன?
   கேவல ஞானம்

5. ஞானம் பெற்ற பின் வர்த்தமானர் எவ்வாறு அழைக்கப்பெற்றார்?
   மகாவீரர், ஜீனர்

6. வர்த்தமானரின் சீடர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர் ?
   சமணர்

7. வர்த்தமானர் மறைந்த இடம் எது?
   பாவா(ராஜகிருகம்)

8. வர்த்தமானரின் மனைவியின் பெயர் என்ன?
   யசோதை

9. சமணத்தின் முக்கிய கோட்பாடுகள் எவை?
   நல்ல நம்பிக்கை, நல்ல அறிவு, நல்ல நடத்தை

10. சமணத்தை ஆதரித்த மன்னர்கள் யார்?
    சந்திரகுப்த மௌரியர், காரவேலன் (கலிங்க நாடு), கங்ககர்கள், கடம்பர்கள், சாளுக்கியர்கள், ராஷ்டிரக்கூடர்கள்.

11. தென்னிந்தியாவிற்கு வந்த சமணர்களுக்கு தலைமையேற்றவர் யார்?
பத்ரபாகு

12. வட இந்தியாவில் இருந்த சமணர்களுக்கு தலைமையேற்றவர் யார்?
ஸ்தூலபாகு

13. ஸ்வேதம்பரர்கள் யார்?
வெள்ளையுடை அணிந்தவர்கள்.

14. திகம்பரர்கள் யார்?
திசையையே ஆடையாக அணிந்தவர்கள்.

15. திகம்பரர்களின் தலைவர் யார்?
ஸ்தூலபாகு

16. முதலாம் சமண மாநாட்டினை கூட்டியவர் யார்? எங்கு கூடியது ?
ஸ்தூலபாகு, பாடலிபுத்திரம்

17. இரண்டாம் சமண மாநாடு நடைபெற்ற இடம் எது?
வாலாபி

18. சமண இலக்கியத்தின் இறுதி வடிவம் எது? எங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது?
வாலாபி (பன்னிரண்டு அங்கங்கள்)

19. கௌதமர் எங்கு பிறந்தார்?
லூம்பினி தோட்டம் (கபிலவஸ்து)

20. சித்தார்த்தரின் பெற்றோர் யார்?
சுத்தோதனர், மாயாதேவி

21. சித்தார்த்தர் எக்குலத்தை சார்ந்தவர் ?
சாக்கிய குலம்

22. சித்தார்த்தரின் வளர்ப்புத் தாய் யார்?
பிரஜாபதி

23. சித்தார்த்தரின் மனைவி மற்றும் மகன் யார்?
யசோதரை, ராகுலன்

24. புத்தருக்கு பேரறிவு கிட்டிய இடம் எது?
போதிமரம் (புத்த கயா)

25. புத்தர் என்னும் சொல்லின் பொருள் என்ன?
ஒளிபெற்றவர்

26. புத்தரின் முதல் உரை எங்கு நிகழ்த்தப்பட்டது?
பெனாரஸ் அருகிலுள்ள சாராநாத்

27. புத்தர் மறைந்த இடம் எது?
குசிநகரம்

28. புத்தரின் முக்கிய சீடர்கள் யார்?
சரிபுட்டர், மொக்கலண்ணர், ஆனந்தர், கசபர், உபாலி

29. புத்தரின் சீடர்களாக மாறிய மன்னர்கள் யார்?
பிரசேனஜித் (கோலச நாடு), பிம்பிசாரர் (மகத நாடு)

30. எண்வழிகள் யாவை?
நன்னம்பிக்கை, நன்முயற்சி, நற்பேச்சு, நன்னடத்தை, நல்வாழ்வு, நன்முயற்சி, நற்சிந்தனை, நல்தியானம்.

31. பிக்குகள் யார்?
புத்த சமயத் துறவிகள்

32. உபாசிகர்கள் யார்?
சாதாரண புத்த மதத்தை தழுவிய மக்கள்

33. புத்த சமயத்தை ஏற்றுக்கொண்ட அரசுகள் எவை?
மகதம், கோசலம், கோசாம்பி

34. முதல் புத்த சமய மாநடு நடைபெற்ற இடம் எது? தலைமையேற்றவர் யார்?
ராஜகிருகம், மகாகசபர்

35. முதல் புத்த சமய மாநாட்டின் முக்கிய நோக்கம் என்ன?
புத்தரது போதனைகளின் தூய்மையை பாதுகாத்தல்

36. இரண்டாம் புத்த சமய மாநாடு எங்கு நடைபெற்றது?
வைசாலி

37. மூன்றாம் புத்த சமய நடைபெற்ற இடம் எது? யாருடைய ஆதரவில் நடைபெற்றது?
பாடலிபுத்திரம், அசோகர், (தலைமை : மொக்காலிபுத்ததிஸ்ஸா)

38. திரிபீடகங்கள் இறுதி வடிவம் பெற்ற மாநாடு எது?
மூன்றாம் புத்த சமய மாநாடு

39. நான்காம் புத்த சமய மாநாடு நடைபெற்ற இடம் எது? தலைமையேற்றவர் யார்?
காஷ்மீர். (பங்கேற்றவர் : அசுவகோஷர்)

40. நான்காம் புத்த சமய மாநாட்டினை கூட்டியவர் யார்?
கனிஷ்கர்

41. மகாயானம் என்னும் புத்த சமய புதிய பிரிவு உருவான மாநாடு எது?
4ம் புத்த சமய மாநாடு

42. புத்தர் போதிக்க அசோகர் பரப்பிய சமயம் எது?
ஹீனயானம்

43. திரிபீடகங்கள் எவை ?
சுத்த பீடகம், வினய பீடகம், அபிதம்ம பீடகம்.

44. புத்த சமய மொழி எது ?
பாலி

45. புத்த சமய பல்கலைக்கழகங்கள் எங்கு நிறுவப்பட்டன?
தட்சசீலம். நாளந்தா, விக்ரமசீலா

46. 16 பெரும் அரசுக்கள் பற்றி கூறும் புத்த இலக்கியங்கள் எது?
அங்குத்தார நிகயம்

47. 16 பெரும் அரசுகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது ? அவை யாவை ?
பதினாறு மகாஜனபதம், அங்கம், மகதம், காசி, கோசலம், வஜ்ஜி, மல்லம், சேதி, வத்சம், குரு, பாஞ்சாலம், மத்ச்யம், சூரசேனம், அஸ்மகம், அவந்தி, காந்தாரம், காம்போஜம்.

48. வத்ச தேசத்தின் தலைநகரம் எது?
அலகாபாத் நகருக்கருகில் உள்ள கோசாம்பி.

49. வத்ச தேசம் எங்கு அமைந்திருந்தது ?
யமுனை நதிக்கரை

50. வத்ச தேசத்தின் புகழ்பெற்ற அரசன் யார்?
உதயணன்

51. அவந்தி அரசின் தலைநகரம் எது?
உஜ்ஜயினி

52. அவந்தி அரசின் சிறந்த அரசன் யார்?
பிரயோதித்யன்

53. உதயணனின் மகள் யார்?
வாசவத்தத்தை

54. கோசல தேசத்தின் தலைநகரம் எது ? புகழ்பெற்ற அரசன் யார்?
பிரசேனஜித்

55. வட இந்திய அரசுகளில் மிக வலிமை வாய்ந்த அரசு எது ?
மகதம்

56. மகதத்தின் தலைநகரம் எது?
ராஜகிருகம்

57. பிம்பிசாரரின் வம்சம் எது ?
ஹர்யாங்க வம்சம்

58. பிம்பிசாரரின் முதம் மண உறவு எங்கு ஏற்படுத்தப்பட்டது ?
கோசல நாடு

59. வைசாலி இளவரசி யார்?
செல்லண்ணா (லிச்சாவி குடும்பம்)

60. பஞ்சாப் மத்ரா இளவரசி யார்?
கேமா

61. படையெடுப்புகளுக்கு பெயர் பெற்றவர் யார்?
அஜாதசத்ரு

62. பாடலிபுத்திர நகரை அமைத்தவர் யார்?
உதயின்

63. கங்கை நதி சோன் நதியுடன் கலக்கும் இடத்தில் அமைந்த நகரம் எது?
பாடலிபுத்திரம்

64. அஜாதசத்ருவைத் தொடர்ந்து ஆட்சி பொறுப்பை ஏற்றவர் யார்?
உதயின்

65. மௌரியப்பேரரசின் தலைநகரம் எது ?
பாடலிபுத்திரம்

66. யாருடைய ஆட்சிக்காலத்தில் இரண்டாம் புத்த சமய மாநாடு கூடியது ?
காகவர்மன் (அ) காலசோகன்

67. நந்த வம்சத்தின் வலிமைமிக்க ஆட்சியாளர் யார்?
மகாபத்ம நந்தர்

68. ஏகரதன் என்னும் பட்டத்தை சூட்டிக்கொண்டவர் யார்?
மகாபத்ம நந்தர்

69. நந்த வம்சத்தின் கடைசி அரசர் யார்?
தனநந்தர்

70. அக்கமேனிய பேரரசின் சிறந்த வெற்றியாளர் யார்?
மகா சைரஸ்

71. இந்தியாவிற்கு எதிராக படையெடுத்த முதல் படையெடுப்பாளர் யார்?
மகா சைரஸ்

72. மகாசைரசின் மகன் யார்?
காம்பிசிஸ்

73. சைரசின் பேரன் யார்?
முதலாம் டேரியஸ்

74. இருபதாவது சாட்ரபியாக திகழ்ந்தப் பகுதி எது ?
பஞ்சாப், சிந்து

75. சிந்து நதியை ஆய்வுக்கொள்ள டேரியஸ் அனுப்பிய படைக்கு தலைமை வகித்தவர் யார்?
ஸ்கைலாஸ்

76. ஈரானிய எழுத்து வடிவம் எது?
கரோஷ்தி

77. ஹைடாஸ்பஸ் எனப்படும் நதி எது ?
ஜீலம்

78. அர்த்தசாஸ்திரத்தை எழுதியவர் யார்?
கௌடில்யர்

79. இந்திய மாக்கியவல்லி யார்?
கௌடில்யர்

80. முத்ராராட்சசம் எனும் நாடக நூலின் ஆசிரியர் யார்?
விசாகதத்தர்

81. சந்திரகுப்தன் கௌடிலயரின் துணைகொண்டு நந்தர்களை முறியடிக்கும் நிகழ்வை கூறும் நூல் எது ?
முத்ராராட்சசம்

82. சந்திரகுப்தர் அவையில் இருந்த கிரேக்க தூதுவர் யார்?
மெகஸ்தனிஸ்

83. இண்டிகாவின் ஆசிரியர் யார்?
மெகஸ்தனிஸ்

84. இலங்கை நூல்கள் எவை?
மகாவம்சம், தீபவம்சம்

85. வடமேற்கு இந்தியாவில் அசோகரின் கல்வெட்டுகள் எந்த வடிவத்தில் காணப்படுகின்றன ?
கரோஷ்தி

86. மௌரியப் பேரரசை நிறுவியவர் யார்?
சந்திரகுப்த மௌரியர்

87. சாணக்கியர் , விஷ்ணுகுப்தர் என அழைக்கப்படுபவர் யார்?
கௌடில்யர்

88. அலெக்சாந்தரின் படைத்தளபதியின் பெயர் என்ன ?
செலூகஸ் நிகேடர்

89. அமித்ரகாதன் எனப்படுபவர் யார்? யாரால் அவ்வாறு அழைக்கப்பட்டார்?
பிந்துசாரன், கிரேக்க நாட்டு ஆசிரியர்கள்

90. அமித்ரகாதன் என்றால் என்ன?
எதிரிகளை அழிப்பவன்

91. தாரநாதர் யார்?
திபெத் அறிஞர்

92. சிரியா நாட்டு அரசன் முதலாம் ஆன்டியோகஸ் பிந்துசாரரின் அவைக்கு அனுப்பிய தூதுவர் யார்?
டைமக்கஸ்

93. பிந்துசாரரின் மகன் யார்?
அசோகர்

94. அசோகரின் மூத்த சகோதரர் மற்றும் இளைய சகோதரர் யார்?
சுசிமா, திசா

95. அசோகர் புத்த மதத்தை தழுவ காரணமான முக்கிய புத்தபிக்கு யார்?
உபகுப்தா

96. சாக்கிய உபாசகர் என்றால் என்ன?
சாதாரண சீடர்

97. தர்ம மகாமாத்திரர்கள் யார்?
தர்மத்தை பரப்பும் சிறப்பு அலுவலர்கள்

98. அசோகரின் மகள் மற்றும் மகன் யார்?
மகேந்திரன், சங்கமித்ரா

99. மூன்றாம் புத்த மாநாட்டிற்கு தலைமை வகித்தவர் யார்?
மொக்கலிபுத்த திசா

100. "வரலாற்றின் பட்டியலில் குவிந்திருக்கும் ஆயிரக்கணக்கான அரசர்களில் அசோகரின் பெயர் மட்டும் தன்னந்தனி நட்சத்திரமாக ஒளிவீசுகிறது" எனக்கூறியவர் யார்?
எஸ்.ஜி.வெல்ஸ்

101. சாம்பிரதியின் தந்தை யார்?
தசரதன்

102. மௌரிய வம்சத்தின் கடைசி அரசர் யார்?
பிருகத்ரதன்

103. பிருகத்ரதனின் படைத்தளபதி யார்?
புஷ்யமித்திர சுங்கன்

104. அமாத்தியர்கள் யார்?
சிவில் பணியாளர்கள்

105. சம்ஹர்த்தர் யார்?
வருவாய்த் துரை தலைவர்

106. பிளினி எந்த நாட்டைச்சேர்ந்தவர்?
கிரேக்க நாட்டு அறிஞர்

107. வாணிகம் மற்றும் தொழில்துறை அலுவலர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர் ?
அத்யட்சகர்கள்

108. தலைநகரின் உச்சநீதிமன்ற நீதிபதி எவ்வாறு அழைக்கப்பட்டார் ?
தர்மாதிகாரி

109. மௌரியப்பேரரசின் தலைநகரங்கள் யாவை ?
தட்சசீலம், உஜ்ஜயினி, சுவர்ணகிரி, கலிங்கம்

110. மாவட்ட நிர்வாக அதிகாரிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
ராஜீகர்கள்

111. மாவட்ட நிர்வாக துணை அதிகாரிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர் ?
யுக்தர்கள்

112. கோபன் யார்?
கிராம உயர் அதிகாரி

113. நகர மேற்பார்வையாளார் யார்?
நகரிகா